Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 285

புதன்கிழமை
07 செப்ரெம்பர் 2022


ஆவணி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## தெல்லிப்பழை துர்க்கை அம்மன் இன்று தேர்!

யாழ்ப்பாணம், செப். 7
தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தேர்த்திரு விழா பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ இன்று 11

# கடனை வாங்கிக்கொண்டு நாட்டை நடத்த முடியாது!



### ஐ.தே.க. ஆண்டுவிழாவில் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, செப்ரெம்பர் 7
நாம் ஒவ்வொருநாளும் யாசகம் எடுத்துக்கொண்டும், கடனை வாங்கிக் கொண்டும் இருக்க முடியாது. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று யாராக இருந்தாலும் அவர்கள் நாடு வங்குரோத்து அடைவதை விரும்புவதில்லை. எனவே, கடன் பெறாத பொருளாதாரம் ஒன்றை உருவாக்க ஒன்றுபடுவோம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 11

## ரஷ்ய எரிபொருளை பெறுவதில் சவால்

### எரிசக்தி அமைச்சர் ஒப்புதல்

கொழும்பு, ஓக. 7
ரஷ்யாவிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதில் இலங்கை பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். 11

## பொருளாதாரக் குற்றவாளிகள் ஏன் தண்டிக்கப்படவில்லை?

### அநுரகுமார திஸாநாயக்க கேள்வி

கொழும்பு, ஓக. 7
நாட்டை இவ்வளவு பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிய பொருளாதாரக் குற்றவாளிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமைக்கு 11

### தமிழர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட

## மாகாண சபை அதிகாரங்கள் தற்போது எவரிடம் உள்ளன?

### சிறீதரன் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஓக. 7
தமிழர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபை அதிகாரங்கள் தற்போது எவரிடம் உள்ளன? - இவ்வாறு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரன். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்று 11

### அரச அலுவலர்களுக்கு

## ஊதியமற்ற விடுமுறை: பரிந்துரைக்க தனிக்குழு

கொழும்பு, ஓக. 7
அரச அலுவலர்களின் சேவை மூப்பைப் பாதிக்காத வகையில், 5 வருட காலம் விடுமுறை வழங்குவது தொடர் 04

## சமஷ்டிக்கு ஏற்பட்ட கதிதான் சர்வதேச நாணய நிதியத்துக்கும்!

### முஷாரப் எம்.பி. அதிருப்தி

கொழும்பு, செப். 7
சமஷ்டி முறைமை உலகெங்கும் இருக்கின்றது. சமஷ்டி என்கின்ற அழகிய வார்த்தை பல்வேறு 11

## நாணய நிதியத்தின் ஒப்பந்தம் உடன் பகிரங்கப்படுத்தப்படாது

### நடைமுறையாகும்போதே அறிவிக்கப்படும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு!

கொழும்பு, ஓக. 7
சர்வதேச நாணயநிதியத்தின் திட்டங்கள் குறித்த விவரங்களை முன்கூட்டியே நாடாளுமன்றத்தில் வெளியிடும் நடைமுறையை இலங்கை ஒரு போதும்பின்பற்றுவது இல்லை. வரிகளில் மேற் 11

## போஷாக்கை மேம்படுத்த அரசிடம் திட்டம் இல்லை

### ரோஹினி எம்.பி. விளாசல்

கொழும்பு, செப். 7
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில், மாணவர்களினதும், நாட்டு மக்களினதும் போஷாக்கை 10

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதான


## இளைஞர்கள் நேற்றுமுதல் உணவுத்தவிர்ப்புப் போர்

கொழும்பு, செப். 7
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 14 பேர், தமது விடுதலையை வலியுறுத்தி கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் உணவுதவிர்ப்புப் போராட்டத்தை 04

### இந்தியாவில் இருந்து

## நாடு திரும்பினால் அரச காணியாம்!

யாழ்ப்பாணம், செப். 7
இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பும் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அரச காணி வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் 04




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கர்ப்பிணிகளுக்கு ரூ.20 ஆயிரம் கொடுப்பனவும் இப்போது இல்லை

## ரூ. 2,500 அதிகரிப்பு என்பது ஏமாற்று நாடகம் என்கிறார் ஹேஷா விதானகே



**கொழும்பு, செப். 7**

**கர்ப்பிணித் தாய்மாருக்கு வழங்கப்படுவதாகக் கூறப்படும் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் மேலதிகமாக 2ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ளமை நாட்டு மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடு.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.

பிள்ளைகள் மற்றும் தாய்மாரின் மந்த போசணை தொடர்பில் யுனிசெப் நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கை மீதான விவாதம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் மேலதிகமாக 2 ஆயிரத்து 500 ரூபாவை வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இடைக்கால வரவு - செலவு திட்டத்தில் முன்மொழிந்துள்ளார்.

முதலில் கர்ப்பிணித் தாய்மாருக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவே வழங்கப்படுவதில்லை. இந்தக் கொடுப்பனவு வழங்கப்படாமை குறித்து ஜனாதிபதி அறிந்திருக்கவில்லையா? அல்லது பொய்யுரைக்கும் ஆளும் தரப்புடன் ஒன்றிணைந்து அவர் பொய்யுரைத்துள்ளாரா?

வழங்கப்படாத 20ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் ஒன்றிணைத்து மேலதிகமாக 2ஆயிரத்து 500 ரூபாவை வழங்குவதான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பு நாட்டுமக்களை ஏமாற்றும் செயற்பாடேயன்றி வேறில்லை - என்றார். (ச-இ)

# ராஜபக்சக்களின் சேவைகளை எதிர்பார்க்கின்றனராம் மக்கள்

## பொதுஜன பெரமுன கூறுகின்றது



கொழும்பு, செப்.7

ராஜபக்சக்களின் அரசியல் வகிபாகம் நாட்டுக்கு தேவை என்ற நிலைப்பாட்டிலேயே பெரும்பாலான இலங்கையர்கள் இன்றும் உள்ளனர். அதனால் ராஜபக்சக்கள் பதவி விலகி இருக்கக்கூடாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாக உள்ளது.

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ராஜபக்சக்கள் தாம் வகித்த பதவிகளில் இருந்து விலகியது தவறு என்பதே நான் உட்பட எமது கட்சியில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்தாக உள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு 69 லட்சம் பேர் வாக்களித்தனர். அவரை நீக்கும் அதிகாரம் அந்த மக்களுக்கே உள்ளது. மாறாக வீதிக்கு இறங்கும் சுமார் ஒரு லட்சம் பேரால் அதை செய்ய முடியாது.

மஹிந்த ராஜபக்சவை பிரதமராக்குவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்தது. அதனால் அவர் பதவி விலகியதும் தவறு. இந்த நாட்டில் மக்கள் ஆசியுடன்தான் ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர். பலவந்தமாக வந்ததில்லை. எமது கட்சி மக்களுடன்தான் உள்ளது. நாம் மக்கள் மத்தியில் செல்வோம். ராஜபக்சக்களின் தேசிய அரசியல் அவசியம் என்ற நிலைப்பாட்டிலேயே பெரும்பாலான மக்கள் உள்ளனர்.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் பேச்சு நடத்தினோம். அரசியல் பற்றி பேசவில்லை. ஆனாலும் அரசியலுக்கு வரும் எண்ணத்துடன் அவர் இல்லை - என்றார். (எ-44)

# எரிபொருள் விலைச் சூத்திரம் நிதியமைச்சிடம் ஒப்படைப்பு



கொழும்பு, செப். 7

எரிபொருள் விலைச் சூத்திரம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு நிதியமைச்சிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் எரிபொருள் விலையில் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் 15 ஆம் திகதிகளில் புதிய விலைகள் அறிவிக்கப்படும் என்றும் அரசாங்கம் முன்னர் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் எரிபொருள் விலைச் சூத்திரம் தொடர்பிலான பொறுப்பு நிதியமைச்சிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# சந்நிதி தேர்த் திருவிழாவை முன்னிட்டு விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், செப்.7

வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு விசேட இ.போ.ச. பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமையும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்களின் வசதி கருதி விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை இ.போ.ச. சாலையினர் அறிவித்துள்ளனர். (எ)

# முச்சக்கர வண்டிகளுக்கு தனி எரிபொருள் கோட்டா



கொழும்பு, செப். 7

முச்சக்கர வண்டிகளுக்கு தனியான எரிபொருள் கோட்டா வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றின் நேற்றைய அமர்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களால் முச்சக்கர வண்டிகளுக்கு வழங்கப்படும் எண்ணெய் ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக அதே எரிபொருள் ஒதுக்கீடு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# அரசாங்கத்தின் செயற்பாடு மோசமான விளைவை தரும்

## ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் சிறிலங்கா கண்டனம்

கொழும்பு, செப்.7

அமைதிப் போராட்டங்களில் ஈடுபட்டுக் குரல் எழுப்பிய பொதுமக்கள் கைது செய்யப்படுவதையும், அவர்கள் மீது ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்படுவதையும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் சிறிலங்கா வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் சிறிலங்கா தெரிவித்துள்ளதாவது:-

எந்தவொரு சூழ்நிலையிலும் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்குச் சொந்தமான பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஊழலற்ற நாட்டை உருவாக்கும் நோக்குடன் குரல் எழுப்பிய பொதுமக்களைத் தன்னிச்சையாகவும், நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றிய நிலையிலும் கைது செய்து விசாரணை நடத்துவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டங்கள் தவறாகப் பயன்படுத்துவதை உன்னிப்பாக அவதானிக்கின்றோம்.

சட்டத்தின் இத்தகைய தன்னிச்சையான பிரயோகமானது பொதுமக்கள் தங்கள் ஜனநாயக உரிமைகளைப் பின்பற்றத் தயக்கம் காட்டும் நிலைமையை உருவாக்கும். இவை நாட்டுக்கு மோசமான விளைவுகளை உருவாக்கவே வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# ஞாபக மறதி நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

## இலங்கை அல்சைமர் சங்கம் தகவல்

கொழும்பு, செப். 7

நாட்டில் ஞாபக மறதி நோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது என இலங்கை அல்சைமர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;

செப்ரெம்பர் மாதம் சர்வதேச ஞாபகமறதி நோயாளர்களுக்கான மாதமாகவும் செப்ரெம்பர் 21ஆம் திகதி சர்வதேச ஞாபக மறதியாளர்கள் தினமாகவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கையிலும் ஞாபக மறதி நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மருத்துவமனை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு அதிகரிக்கும் பட்சத்தில் 2050ஆம் ஆண்டளவில் இலங்கையில் அரை மில்லியனுக்கும் அதிகமானோர் ஞாபக சக்தி அற்றவர்களாக அடையாளம் காணப்படக்கூடும்.

கடந்த காலங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கையை முடக்கிப்போட்ட கொரோனாத் தொற்றுக் காரணமாகவும் ஞாபக மறதி நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு நிகழ்ந்திருக்கலாம் - என்றுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கட்டறுக்க நினைக்கும் கட்சிகள்

வரலாற்றில் இல்லாத பொருளாதார நெருக்கடியில் சிறிலங்கா சிக்கியிருக்கும் இந்தக் காலகட்டம், தமிழ் மக்களின் உரிமைகளுக்கான பேரம் பேசலுக்குத் தக்க தருணமாகவே நோக்கப்படுகின்றது. ஆனால் இந்தச் சந்தர்ப்பமும் தமிழ்த் தலைமைகளின் சுயநலப்போட்டிகளால் கைநழுவிச் செல்லும் என்கின்ற நிலைமையே இருக்கின்றது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், அதன் தொடர்ச்சியாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான முற்சிகளுக்கு தலைமையேற்றிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயங்கிய சந்தர்ப்பத்தில் ஒற்றுமையுடனும், அதீத பலத்துடனும் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் நலிய ஆரம்பித்திருந்தது.

விடுதலைக்காகப் போராடும் ஓர் இனத்தின் பிரதிநிதிகள் என்பதை மறந்து தேசியம் என்ற கோஷத்தைக் கவசமாக்கிக் கொண்டு அரசியல்வாதிகள் இலாபம் தேட முற்பட்டதன் விளைவே, தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதறுண்டுபோகக் காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது. தேர்தல் காலங்களில் 'ஒற்றுமை' கோஷத்துடன் மக்கள் முன்னே தோன்றும் தமிழ்த் தலைமைகள், வாக்குகளைக் கையகப்படுத்தியவுடன் அதை மறந்தும் போகின்றனர்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் அரசியல் கட்டமைப்பு எதற்காக உருவாக்கப்பட்டது என்பதை மறந்து, அதிலுள்ள கட்சிகள் செயற்படுவது தமிழ் மக்களின் சாபக்கேடே. பல நாடுகளின் கூட்டு வலுவுடன் தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு தசாப்த காலம் கடந்துள்ளபோதும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை நோக்கி ஒரு அடியேனும் தமிழ் அரசியல் தலைமைகள் முன்னகர்ந்ததாக தமிழ் மக்களால் திருப்திகொள்ள முடியவில்லை. உண்மையைக் கூறுவதானால் தமிழ் மக்களின் நிலைமை முன்னரை விடவும் இப்போது மோசமாகியிருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம், காணி சுவீகரிப்புக்கள், தமிழ் மக்களின் பூர்வீக எல்லை நிலங்கள் அபகரிப்பு, தமிழரின் பூர்வீக வழிபாட்டிடங்கள் பௌத்தமயமாக்கல் என நித்தமும் தமிழ் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டே வாழ்கின்றனர். இவற்றுக்கான தீர்வுகளை நோக்கி ஓரடி கூட முன்னெடுத்து வைக்க முடியாதிருப்பதற்கு தமிழ் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் ஒற்றுமையின்மையும் ஒரு பிரதான காரணமே.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இதுவரைகாலமும் கூட்டமைப்பின் உள்ளே புகைந்து கொண்டிருந்ததை வெளிக்காட்டியிருக்கிறார். எதிர்வரும் தேர்தல்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்து அனைத்துத் தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தவேண்டும் என்று கூறியிருக்கின்றார். தமிழ்க் கட்சிகள் ஒற்றுமை என்று பேசிக்கொண்டிருந்தாலும் உண்மை நிலைமை அவை ஒவ்வொன்றும் தனித்தனியே குறுக்கோட்டம் ஓடுவதிலேயே அதிக நாட்டத்துடன் இருக்கின்றன. விடுதலைப்புலிகள் உருவாக்கிய கட்சி என்ற விம்பம் தமிழ் மக்களிடம் இருப்பதால், கூட்டமைப்பை விட்டு வெளியேறினால் தமக்கு வாக்கு விழாது என்ற அச்சத்தால் மட்டுமே பங்காளிக் கட்சிகள் மட்டுமல்ல தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பில் தொங்கிக் கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் எப்போதோ நாணயக்கயிற்றை அறுத்துக் கொண்டு அந்தக் கட்சிகள் ஓடியிருக்கும் என்பதே யதார்த்தம். எனினும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், விக்னேஸ்வரனும் பெற்ற வாக்குகள், கூட்டமைப்பை விட்டு விலக நினைப்போருக்கு நம்பிக்கையைக் கொடுத்துள்ளன. அதனால்தான் கூட்டை விட்டு – வீட்டை விட்டு – தனிக்குடித்தனம் போக தமிழரசு உள்ளிட்ட கூட்டமைப்புக் கட்சிகள் அதிக பிரயத்தனம் செய்கின்றன. இவ்வாறு தத்தம் கட்சி அரசியலையும், பதவிகளையும் மனதில் முன்னிலைப்படுத்தி, ஏட்டிக்குப் போட்டியாக தமிழ்க் கட்சிகள் செயற்படுகின்றன. அந்த ஏட்டிக்குப்போட்டியே தமிழ் மக்களுக்கான தீர்வை நோக்கிய பயணத்துக்குப் பெரும் பின்னடைவாக இருக்கின்றது.

போலியான ஒற்றுமை முகத்தைக் காட்டி மக்களை ஏமாற்றுவதைக் காட்டிலும், கட்சிகள் தனித்துத் தேர்தல்களைச் சந்திப்பது தமிழ் இனத்துக்கு நன்மையாகவே இருக்கும். அப்போதுதான் தமிழ் மக்கள் தங்கள் உள்ளக்கி[illegible]யும் அரசியல்வாதிகளுக்குக் காட்டி, தக்க [illegible] புகட்ட முடியும்.

நாளொரு நல்வார்த்தை

"நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார், ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை"
- சுவாமி விவேகானந்தர்




# ஜெனிவா கூட்டத் தொடரில் சிறிலங்காவுக்கு நெருக்கடி!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.7**



**ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்தாலும் சிறிலங்காவின் வெளிவிவகாரக் கொள்கையில் பெரியளவான மாற்றங்கள் இல்லை. இந்த நிலைமையில் அமெரிக்க சார்பு நாடுகள் இலங்கையைப் பாதுகாக்கும் என்பது சந்தேகமே என்று தெரிவித்துள்ளார் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை காரணம் காட்டி இன்னும் கால அவகாசம் தாருங்கள் என்று சிறிலங்கா அரசாங்கம் கோரவுள்ளது. பொறுப்புக் கூறலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான முயற்சிகளை எடுத்துள்ளது. ஆனால் சிறிலங்கா சர்வதேசத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்று பல தரப்புக்கள் முயற்சிகளை எடுத்துள்ளன.

கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களில் நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் அனைத்தும் சிறிலங்காவுக்கு எதிராகத் திரும்பியுள்ளன.

சிறிலங்கா அரசாங்கத்தால் இந்தியா பலமுறை ஏமாற்றப்பட்டுள்ளது. இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளை சிறிலங்கா காப்பாற்றியதாக வரலாறு இல்லை. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 வருடக் குத்தகைக்கு சீனாவுக்குக் கொடுத்திருக்கின்றது. 99 ஆண்டுகளில் என்ன நடக்கும் என்பதற்கு முத்தாய்ப்பாகவே சீனாவின் உளவுக் கப்பலின் வருகை இருக்கின்றது.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக சீனாவுடன் பேசினால் உள்விவகாரத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்ற பதிலே தரப்படுகின்றது. தமிழ் மக்கள் எக்கேடு கெட்டாலும், தங்கள் ஆளுமை என்பது இந்து சமுத்திரத்தில் இருக்கவேண்டும் என்றே சீனா விரும்புகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பை ரெலோ ஜெனிவா கூட்டத்தொடருக்குப் பின்னர் நடத்தியிருக்கலாம். ஜெனிவா மனித உரிமைகள் பேரவை தொடர்பாக நாங்கள் ஏற்கனவே கூட்டாக எடுத்த தீர்மானங்களில் இருந்து ரெலோ விலக மாட்டாது என்று நம்புகின்றேன் - என்றார். (எ-20)

# 4 பில்லியன் டொலர் வழங்கி இந்தியா நெருக்கடியில் உதவி

கொழும்பு, செப்.7

பொருளாதார நெருக்கடிக்குப் பின்னரான காலப்பகுதியில் சிறிலங்காவுக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர் இந்தியாவால் வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் இந்தியாவுக்கான வதிவிடப் பிரதிநிதி ருச்திரா காம்போஜ் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியா நெருங்கிய அயல்நாடுகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றது. 2017ஆம் ஆண்டு இந்தியா ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்து அமைத்த அபிவிருத்தி சகோரத்துவ நிதியத்தின் மூலம், அபிவிருத்தி அடைந்துவரும் 51 நாடுகளில் 66 திட்டங்களுக்காக ஒத்துழைப்பு வழங்குகின்றது - என்றார். (எ-இ)

நாளை
08.09.2022
வியாழக்கிழமை
ஆவணி 23

சுபநேரம் : 07.34 – 09.04
ராகுகாலம்: 01.34 – 03.04

பிரதோஷ விரதம், அடைக்கலமாதா திருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.க. மீதான குற்றச்சாட்டை மறுக்கும் பொதுச்செயலர்

பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது மன்ற ஆலோசகர்
நாக.தமிழிந்திரனின் மகள்
பிருந்தாயினி
க.பொ.த.உயர்தரப் பரீட்சையில்
3 A (மா.நி.08)
சட்டத்துறைக்கான தகைமை
பெற்றமையை இட்டு பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
சிவபூரணி முத்தமிழ் மன்ற
அறநெறிப் பாடசாலை அதியர்,
சமூகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்
தமிழ் இணையக் கல்விக்கழகத்தினூடாக
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்
இளங்கலைமாணி (B.A) தமிழியல்
(Tamilology) சிறப்புப் பட்டம்!



(University Grants Commission) அங்கீகரிக்கப்பட்டது
2022, 2023 ஆம் கல்வியாண்டுக்கான விரிவுரைகள்
செப்டம்பர் மாத இறுதியில் ஆரம்பமாகும்.
பதிவுகளை மேற்கொள்ளும்
இறுதி திகதி ... வரை நீடிக்கப்பட்டுள்ளது
வவுனியாவில்
தமிழ் இணையக் கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரியூட்
A9 வீதி, புளியங்குளம்.
071 315 6109
யாழ்ப்பாணத்தில்
தமிழ் இணையக் கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரியூட்
மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி.
077 805 1173

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்
நன்றி நவிலலும்



கடந்த 09.08.2022 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதப்பேறு
அடைந்த எங்கள் குடும்பத்தலைவர்
வேலுப்பிள்ளை தர்மராஜா (J.P)
(ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் – பளை பலநோக்கு
கூட்டுறவுச்சங்கம், அளவெட்டி மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்,
அகில இலங்கை சமாதான நீதவான், மத்தியஸ்தர்சபை உறுப்பினர்)
அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (07.09.2022)
புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில்
நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம்
வருகைதந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து
கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் இறைபத செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி
வாயிலாகவும் கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள்,
மலர்வளையங்கள், பத்திரிகை மூலம் இரங்கலைத் தெரிவித்து
துயரத்தில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும்
குடும்பத்தினர் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
குடும்பத்தினர்

கட்சியின் யாப்பு திருத்தம் ஊடாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஜனநாயகம் இல்லா தொழிக்கப்பட்டுள்ளது என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரான தயாசிறி ஜயசேகர நிராகரித்துள்ளார்.

கட்சிக்குள் எல்லை கடந்த சுதந்திரம் இருப்பதாலேயே கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக உறுப்பினர்களால் சட்ட நடவடிக்கை நோக்கி நகர முடிகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் தயாசிறி ஜயசேகர தெரிவித்ததாவது:-

சர்வகட்சி அரசாங்கம் அமையாவிட்டால், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை என்ற முடிவை கட்சி எடுத்திருந்தது. அதை மீறி உறுப்பினர்கள் செயற்பட்டனர். கடைசியில் கட்சிக்கு எதிராகவே நீதிமன்றத்தை நாடினர். சுரேன் ராகவன், சாந்த பண்டார ஆகியோரின் பதவிகள் பறிக்கப்பட்டன. நிமல், அமரவீர போன்றவர்கள் நீக்கப்படவில்லை. இப்படிப் பாகுபாடு காட்ட முடியாது. கட்சியின் நலன் கருதியே யாப்புத் திருத்தம் செய்யப்பட்டது. குமார வெல்கம போன்றவர்கள்தான் சுதந்திரக் கட்சியைக் கூறு போட்டனர் -என்றார். (எ-44)

# 61,000 குடும்பங்களுக்கு மாதாந்தம் ரூ. 10 ஆயிரம்

கொழும்பு, செப். 7

**போஷாக்குக் குறைபாடு மற்றும் அவசர நிதி தேவைப்படும் உணவு பாதுகாப்பற்ற குடும்பங்களுக்கு மாதாந்தம் தலா 10ஆயிரம் ரூபா நிதி வழங்க உலக உணவுத் திட்டம் முன்வந்துள்ளது.**

பணவீக்கம் மற்றும் வருமான இழப்பு ஆகியவற்றால் இலங்கை மக்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்கு ஆளாகியுள்ளனர்.

நாட்டின் மக்கள் தொகையில் 33 சதவீதம் அல்லது 7.15 மில்லியன் மக்கள் தற்போது தினசரி குறைந்தபட்ச ஊட்டச்சத்துத் தேவைக்கு குறைவான உணவை உட்கொள்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் சமர்ப்பித்த இடைக்கால வரவு - செலவுத் திட்ட உரையில் நான்கு மாத காலத்துக்கு ஒரு குடும்பத்துக்கு 10 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்தை முன்மொழிந்திருந்தார்.

அதன்படி இந்த ஆண்டு இறுதிவரை அவசர நிதி உதவி தேவைப்படும் அடையாளம் காணப்பட்ட 61 ஆயிரம் உணவுப் பாதுகாப்பற்ற குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா உதவி வழங்க உலக உணவுத் திட்டம் முன்வந்துள்ளதாக திறைசேரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# டொலரில் வீடு கொள்வனவு; அரசாங்கத்தால் 10% சலுகை

கொழும்பு, செப். 7

நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்படும் நடுத்தர வருமான வீட்டுத் தொகுதிகளை டொலர் மூலம் வாங்குவோருக்கு 10 சதவீத தள்ளுபடி வழங்க அரசு தீர்மானித்துள்ளது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புலம்பெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் குறித்த வீடுகளை டொலரில் கொள்வனவு செய்வதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினைக்குத் தீர்வாக இந்தப் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது -என்றார். (ச-இ)



## ஊதியமற்ற...

பில் பரிந்துரைகளை மேற்கொள்வதற்காகச் சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய ஊதியமற்ற விடுமுறைகளை வழங்குவதற்காகவே இந்தப் பரிந்துரைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகளைப் பரிசீலனைக்கு உட்படுத்தி, தகுதியுடையவர்களுக்கு விடுப்பு வழங்குவது தொடர்பில் பரிந்துரைகளை மேற்கொள்ளும். அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (அ-ம)

## இளைஞர்கள்...

நேற்று ஆரம்பித்துள்ளனர்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த 2019, 2020ஆம் ஆண்டு காலப் பகுதிகளின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் மீளுருவாக்கம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 2018ஆம் ஆண்டு பூநகரி - முக்கொம்பன் பகுதியில் கைதுசெய்யப்பட்ட உ.உமாகாந்தன், ர.சயந்தன், வி.இன்பராஜ், மகேந்திரன், பார்த்தீபன் மற்றும் வடமராட்சி - தாளையடியைச் சேர்ந்த செ.உதயசிவம் உட்பட 14 பேர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தம்மை வழக்கில் இருந்து விடுதலை செய்யவேண்டும் அல்லது பிணையிலாவது விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை சிறைச்சாலை நிர்வாகத்திடம் கடிதம்மூலம் அறிவித்து, தமது போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-7)

## நாடு...

ஜீவன் தியாகராஜா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக, சுமார் 58ஆயிரம் தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களில் குறிப்பிட்ட சிலர் தாயகம் திரும்பிய போதிலும் ஏனையோர் நாடு திரும்புவதில் ஆர்வம் காட்டவில்லை. இந்த நிலையிலேயே, இலங்கை திரும்பும் மக்களுக்கு அரச காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தலும் விடுத்துள்ளார்.

அத்துடன், இந்தியாவிலிருந்து வருகை தரும் இலங்கை மக்களுக்கு இந்திய அரசு வழங்கும் வீட்டுத் திட்டத்தின் நிதியை அதிகரிக்குமாறும் இந்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22ஆவது திருத்த சரத்துகள் சில அரசமைப்புக்கு முரணானவை

## உயர் நீதிமன்றம் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.7**

**அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தில் உள்ள சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணாக உள்ளன என்று தெரிவித்துள்ள உயர் நீதிமன்றம் அவற்றை நிறைவேற்றுவதற்கு சாதாரண பெரும்பான்மை அல்லது பொது வாக்கெடுப்பு அவசியம் என்று அறிவித்துள்ளது.**

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவால் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

அரசமைப்பின் 22 ஆவது திருத்த வரைவைச் சவாலுக்குட்படுத்தி நீதிமன்றில் பல தரப்புக்கள் மனுத்தாக்கல் செய்திருந்தன. இந்த மனுக்கள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனகே அலுவிஹாரே மற்றும் அர்ஜுன் ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

மனுக்களில் முன்வைக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த நீதியரசர்கள் விசாரணையை நிறைவு செய்து தமது முடிவுகளை சபாநாயருக்குக் கையளித்திருந்தனர். (எ-இ)

# கனடா செல்ல முயன்ற 11 பேர் கேரளாவில் கைது

## அனைவரும் இலங்கையர்கள்

கொழும்பு, செப். 7

படகு மூலம் கனடா செல்வதற்கென இந்தியாவின் கேரளாவில் கொல்லம் பகுதியிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த 11 இலங்கையர்களை கேரளப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சுற்றுலா விசாவில் இலங்கையிலிருந்த கடந்த வாரம் தமிழகத்துக்கு சென்ற இருவர் காணாமற்போயிருந்தனர்.

அவர்களது தொலைபேசி சமிக்ஞைகளை பின்பற்றி தமிழ்நாடு கியூ பிரிவு பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையிலே கேரளாவில் கொல்லம் பகுதியிலுள்ள விடுதியொன்றில் காணாமற்போயிருந்த இருவர் உட்பட 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஏனைய 9 பேரும் இலங்கையிலிருந்து ஏதிலிகளாக சென்று தமிழகத்தின் ராமநாதபுரத்திலிலுள்ள மறுவாழ்வு மையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் 11 பேரும் சட்டவிரோதமாக படகுமூலம் கனடாவுக்கு செல்லும் நோக்கிலேயே அங்கு தங்கியிருந்தனர் என அவர்களிடம் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கிளாலியில் கஞ்சா மீட்பு சந்தேகநபர்கள் கைது



கிளிநொச்சி, செப்., 7

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலிப் பகுதியில் ஒருதொகை கஞ்சாவுடன் இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கிளாலி பகுதியில் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே 37 கிலோ கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சாவுடன் சந்தேகநபர்களை கடற்படையினர் பளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். பளை பொலிஸார் இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-113)

# புதிய கூட்டணிகளால் எதுவித பாதிப்புமில்லை

## ரோஹித அபேகுணவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, செப். 7

**புதிய கட்சிகள் மற்றும் கூட்டணி களின் உதயத்தால் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.** எமது பயணம் தொடரும் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார். கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தில் இருந்து விலகிய சுயாதீனக் கட்சிகளின் கூட்டணியில் 'மேலவை இலங்கைக் கூட்டணி' என்ற புதிய அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கட்சி ஆரம்பிப்பதென்பது இலகுவான விடயம். அதனை யாரும் செய்யலாம். ஆனால் கட்சிக்கான பரந்துபட்ட கட்டமைப்பை உருவாக்குவதே சவாலுக்குரிய விடயம். அந்தக் கட்டமைப்பை எமது மொட்டுக் கட்சி செய்துள்ளது.

புதிய கட்சியை அல்லது கூட்டணியை ஆரம்பிப்பவர்கள் தேசிய தேர்தலொன்றின்போது பிரதான கட்சிகளுடன் கூட்டணி வைத்துதான் ஆகவேண்டும். எனவே தவறான வழியில் சென்றவர்கள் மீள வரலாம். எமது கதவு திறந்தே இருக்கும் - என்றார். (ச-44)

## சீரற்ற காலநிலை:

# மதில் இடிந்ததில் இளைஞர் சாவு !

கொழும்பு, செப். 7

பேராதனை தவுலகல பிரதேசத்தில் மதில் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிலவி வரும் சீரற்ற காலநிலையால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேபகுதியைச் சேர்ந்த 39 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பொதுமக்கள் அவதானமாக இருக்கும்படி அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## அனுமதிப்பத்திரத்தில் மோசடி;

# 8 டிப்பர்களுடன் சாரதிகள் கைது

சாவகச்சேரி, செப். 7

அனுமதிப்பத்திரத்தில் மோசடி செய்து மணலேற்றிச் சென்ற 8 டிப்பர்களுடன் சாரதிகள் நேற்று கைது செய்யப்பட்டனர் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதடி ஏ9 வீதியில் பயணித்த டிப்பர் வாகனங்களை சாவகச்சேரி பொலிஸார், சோதனையிட்டபோதே அனுமதிப்பத்திரத்தில் மோசடி செய்து மணலேற்றிச் சென்றமை தெரியவந்தது.

அதனையடுத்து டிப்பர்களின் சாரதிகளைக் கைது செய்த பொலிஸார், டிப்பர்களை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர். மேலும் சாரதிகளை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவும் சாவகச்சேரி பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஒ-14,20)

# நாணய நிதிய உடன்பாட்டை பகிரங்கப்படுத்தக் கோரிக்கை

கொழும்பு, செப்.7

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஊழியர் மட்ட இணக்கம் தொடர்பான ஒப்பந்தத்தை அரசாங்கம் பகிரங்கப்படுத்தவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.



நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. அங்கு கருத்துத் தெரிவித்தபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய ஜனாதிபதி எதிரணி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது சர்வதேச நாணய நிதியம் தொடர்பான அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். சர்வகட்சி மாநாட்டின் போதும், நாடாளுமன்றத்தில் வைத்தும் அவர் இந்த வலியுறுத்தலை விடுத்தார். ஏனெனில் நாடாளுமன்றத்துக்கே நிதி அதிகாரம் உள்ளது.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை முன்மாதிரியாகக் கருதி, சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஊழியர் மட்ட இணக்கம் தொடர்பான ஒப்பந்தத்தை சபையில் முன்வைத்து, பகிரங்கப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அப்போதுதான் அவை தொடர்பில் ஆராயக்கூடியதாக இருக்கும். [illegible] நாளையே சமர்ப்பிக்க [illegible] கோருகின்றேன்- என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணுவில் சிவகாமி அம்மன் கோயில்

# சண்டீஹோம கலச அபிஷேகம்

## எதிர்வரும் (09.09.2022) வெள்ளிக்கிழமை

**ஆவணி 22, (07.09.2022) காலை 6.30 மணிக்கு** மாத்ருகாபூஜை, மதுவர்க்கம், புஸ்தகபூஜை, கடஸ்தாபனம். தொடர்ந்து கணபதி ஹோமம், நவக்கிரகஹோமம், ஸ்ரீதேவீமகாத்மிய பாராயணம் துவக்கம். **காலை 10.00 மணி** முதற்காலம் சதசண்டீ ஹோமம் துவக்கம். பகல் 12.00 மணி சுவாசினீ கன்யா பிரம்மசாரி வடுகபைரவ பூஜைகள். மதியம் 1.00 மணிக்கு பூர்ணாஹுதி தீபாராதனை.

**மாலை 5.00 மணிக்கு:**
இரண்டாம் காலம் துவக்கம். ஸ்ரீதேவீமகாத்மிய பாராயணம் துவக்கம். **இரவு 7.00 மணிக்கு** சண்டீஹோமம் துவக்கம். 8.30 மணிக்கு சுவாசினீ. கன்யா பிரம்மசாரி வடுகபைரவ பூஜைகள். இரவு 9.00 மணி பூர்ணா ஹுதி தீபாராதனை.

**ஆவணி 23, (08.09.2022) வியாழக்கிழமை காலை 7.00 மணி** மூன்றாம் காலயாகம் துவக்கம். ஸ்ரீதேவீமகாத்மிய பாராயணம் துவக்கம். **காலை 10.00 மணிக்கு** சண்டீஹோமம் துவக்கம். **பகல் 12.00 மணி** சுவாசினீ கன்யா பிரம்மசாரி வடுகபைரவ பூஜைகள். **மதியம் 1.00 மணி** பூர்ணா ஹுதி தீபாராதனை.

**மாலை 5.00 மணி** நான்காம் காலயாகம் துவக்கம், ஸ்ரீதேவிமகாத்மிய பாராயணம் துவக்கம். **இரவு 7.00 மணிக்கு** சண்டீஹோமம் துவக்கம். **இரவு 8.30 மணி** சுவாசினீ கன்யா பிரம்மசாரி வடுகபைரவ பூஜைகள். **இரவு 9.00 மணி** பூர்ணா ஹுதி தீபாராதனை.

**ஆவணி 24, (09.09.2022) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு** ஐந்தாம் கால யாகம் துவக்கம். ஸ்ரீதேவீமகாத்மிய பாராயணம் துவக்கம். காலை 10.00 மணி சண்டீஹோமம் துவக்கம். **பகல் 12.00 மணி** விசேஷ திரவியாஹுதி, சுவாசினீ கன்யா பிரம்மசாரி வடுகபைரவ பூஜைகள். **பகல் 1.00 மணி** விசேஷ சௌபாக்ய திரவியசகித பட்டுவஸ்த்ர சமர்ப்பணம், வசோத்தாரை ஹோமம், மகாபூர்ணாஹுதி.
தொடர்ந்து கடம் புறப்பாடு, ஸ்ரீசிவகாமி அம்மனுக்கு சண்டீஹோம கலசாபிஷேகம், சிறப்பு அலங்காரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.

**இணுவில் கிழக்கு,**
**இணுவில்.**

**ஆலய ஆதீன கர்த்தா**
**மு.சிவலிங்கம்.**

---

**விற்பனைக்கு [பால் கறக்கக்கூடிய நிலையில்]**

**நல்ல இனப் பால்மாடு உடனடியாக விற்பனைக்குண்டு.**

**077 055 8493**

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

# 36வது பொதுப்பட்டமளிப்பு விழா - 2022

யாழ்.பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பொதுப்பட்டமளிப்பு விழாவினை 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08ம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வியாபார முகாமைத்துவமாணி. வணிகமாணி ஆகிய பட்டக் கற்கைநெறிகளில் 28.03.2021 இற்கு பின்பும் 01.08.2022 திகதிக்கு முன்பும் சித்தியடைந்த மாணவர்களுக்கே மேற்படி பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் வழங்கப்படவிருப்பதால். தகுதி உடைய மாணவர்கள் **19.09.2022 (திங்கட்கிழமை)** இற்கு முன்னதாக அவரவருக்கான கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினையும் பூர்த்தி செய்யப்பட்ட வேண்டுகோள் படிவத்தினையும் (Supplication Form) கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையத்தள முகவரியினூடாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
(கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி பட்டமேலங்கியினை பெற்றுக்கொள்ளும் போது திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்)

வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய இணைய இணைப்பு : https://bit.ly/3KJ4Eyu

- **கட்டணம் மற்றும் வங்கிக்கணக்கிலக்க விபரம்**

பட்டமளிப்பு விழா மொத்தக்கட்டணம் ரூபா.4000.00 ஆகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மக்கள் வங்கி கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்தவேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

மக்கள் வங்கிக்கணக்கிலக்கம் : 890002460001794

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணூடாக அல்லது mdlcrd@univ.jfn.ac.lk என்ற இணையத்தள மூலம் தொடர்புகொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**06.09.2022**

---

## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
# INVITATION FOR BIDS (IFB)
## Procurement of Office Equipment

I. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, goods as specified following Table.
   a. Office Equipment
   Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements.
   a. Bidders shall have valid business registration
   b. and business registration for supply of respective Supplies and Service

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Conduct No (021 2222278/4557 ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days from 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a **non-refundable fee** as specified in the table by cash on working days from **08.09.2022 to 21.09.2022 during 09.00 Hours to 15.00 Hours.**

E. Bids shall be delivered to Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No.572/3, Hospital Road, Jaffna on or before 10.30 a.m Hours of **22.09.2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of bidder's representatives who choose to attend.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118 days from the bid opening.

G. Pre-bid Conference will be held at Conference Hall, Office of the Regional Director of Health Services, Jaffna commencing at 10.00am on **15.09.2022.**

H. A complete set of bid document for this bid will be issued by Email to the interested bidders.

I. Procurement committee will be the right to make final decision in regard the accept.

Table: I

| Reference No | Item | Qty | Non-refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/OE/2022/05 | Steel Cupboard | 14 | 1000.00 | 50,540.00 |
| | Office Table large | 02 | | |
| | Phtocopy Machine Table | 01 | | |
| | Front glass almerah | 72 | | |
| NP/RDHS/PSSP/OE/2022/06 | Revolving Chair | 14 | 1000.00 | 47,480.00 |
| | Conference Table | 01 | | |
| | Conference Chair | 30 | | |
| | Silver Stainless Airport Chair (four Seat) | 04 | | |
| | Office Table | 62 | | |
| | Wooden single bed | 20 | | |
| NP/RDHS/PSSP/2022/OE/07 | Rack | 115 | [illegible] | [illegible] |
| | pallet | 30 | | |


**Chairperson,**
**Regional Procurement Committee,**
**RDHS Office, Jaffna.**

(cr.38011) (2.6)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வரவு 19 . 09 . 1963



சிவ 09 . 08 . 2022

## அமரர் திரு. செல்லையா ரஞ்சன்

(அலுவலகப் பணியாளர், விசேட தரம், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்)

### திதி வெண்பா

ஆண்டு சுபகிருது அமை ஆடியில் பூர்வ பக்கம்
பூண்ட ஏகாதசியாம் நற்திதி காண் நீண்ட
புகழ் ரஞ்சன் பேரான் சீருடலம் இங்கு விட்டு
தவநிலை பெற்ற திதியார்.

ஒரு பொழுதில் உம்மை இழப்போம் என
கணப்பொழுதும் எண்ணவில்லை எம் குலவிளக்கே.....

ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பொன்னம்பலத்தவன்
திருப்பாதங்களை வேண்டுகின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு உடன் வந்து உதவியோருக்கும், தொடர்புசாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், எங்கள் துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**58/11, செட்டித்தெரு,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

(cs.46409) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானகங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

## (Quotation for vehicle hiring on contract basis )

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 25 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

ஹலோ நிறுவனம் கீழ்வரும் வாகனங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. Ambulance (அம்புலன்ஸ்)**

ஹலோ ட்றஸ்டின் பணிகளுக்காக மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அத்துடன் ஆபத்துகளின் போது அம்புலன்ஸ் சேவை வழங்குவதற்கும் எமக்கு வாகனங்கள் தேவைப்படுகின்றன இதற்காக பின்வரும் வாகன வகைகள் கோரப்படுகின்றன.

சிங்கிள் கப் ரக வாகனம் ( மகேந்திரா பொலறோ அல்லது டாடா ஜோடா அல்லது செனோான்.) வெள்ளைக் கலர் விரும்பத்ததக்கது. மற்றும் முழுக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் இரு பக்க பின் இருக்கைகள் பொருத்தப்பட்டு இருப்பதுடன் வாகன மேற் கூடாரமும் இருத்தல் வேண்டும்.

**2. Toyota Hiace**

ஹலோ நிறுவன ஊழியர்களை யாழ்ப்பாண அலுவலகத்திலிருந்து கிளிநொச்சி அலுவலகத்திற்கும் கிளிநொச்சி அலுவலகத்திலிருந்து யாழ்ப்பாண அலுவலகதிற்கும் போக்குவரத்து செய்வதற்காக சொகுசு ரக வான் மாதாந்த குத்தகை அடிப்படையில் சாரதி மற்றும் எரிபொருள் இல்லாமல் பின்வரும் விபரங்களுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

- Toyota Hiace விரும்பத்தக்கது
- 10 பேருக்கான இருக்கைகள் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்
- முழுக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்
- வாகன உற்பத்தியானது 2002ம் ஆண்டுக்குப் பின்னராக இருத்தல் வேண்டும் (ஆங்கில இலக்கம்)

விலைகோரும் படிவங்களை எதிர்வரும் **12 செப்டம்பர் 2022** அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்றஸ்ற்- இலங்கை**
**450,திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**
**06.09.2022**

(cr.38014) 2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 10 . 1941



மறைவு 06 . 09 . 2022

## திரு. கந்தையா மயில்வாகனம் (NHDA)

(இளைப்பாறிய முகாமையாளர் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை - திருகோணமலை)

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும். திருகோணமலை மற்றும் அரியாலையை வாழ்விடங்களாகவும் கொண்ட திரு. கந்தையா மயில்வாகனம் நேற்று (06.09.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துமாணிக்கம் தம்பதியரின் புதல்வனும். காலஞ்சென்றவர்களான இரத்தினம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற ரஞ்சிதமலரின் அன்புக் கணவரும். மைதிலி (NTB). பாலசாஜினி (ஆசிரியர்.- இந்து மகளிர் கல்லூரி). கிஷாந்தினி (ஆசிரியர் - கிளி / பூநகரி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும். சதீஸ் (ASM at St.Antony's Hardware PVT.Ltd) . பாலசபேஷ் (Jaffna College, Vaddukodai) . நரேஸ்குமார் (Poonagari Arasadi vinajagar Ricemill) ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை. நாகேஸ்வரி. Dr.பாலசிங்கம். மகேஸ்வரி. புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரனும். குணாத்தமன். லேதீகா. டர்மிகா. விகாஷனி. வாகினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் யாழ் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**64,சாஸ்திரியார் வீதி,**
**அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :குடும்பத்தினர்**
**077 220 3073**
**021 221 2267**

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 05 . 1942



இறப்பு 06 . 09 . 2022

## நமசிவாயம் நாகேஸ்வரி

(இளவரசி சேலைச் சோலை ஸ்தாபகர்)

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் நாகேஸ்வரி நேற்று (06.09.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற நமசிவாயம் (உரிமையாளர். நியூ சிவாயம்ஸ்). அவர்களின் அன்பு மனைவியும். விவேகானந்தன் (கனடா). சச்சிதானந்தன் (இளவரசி சேலைச் சோலை). சிவகௌரி (நெதர்லானட்). நவசக்தி (ஆசிரியை. இராமகிருஷ்ண தமிழ் மகா வித்தியாலயம். கொழும்பு). நித்தியானந்தன் (இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்). லோகேஸ்வரி (உயர் தொழில் நுட்ப நிறுவனம். குருநகர்). கஸ்தூரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். நிரஞ்சினி (கனடா). சுதா. பரமஜோதி (நெதர்லான்ட்). பரமேஸ்வரன் (பணிப்பாளர். தொழில் நுட்ப கல்லூரி. மருதானை). ஜெயந்தி. சூரியகுமாரன் (நிர்வாக பணிப்பாளர். வீதி அபிவிருத்தி அதிகார சபை). சற்குணராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். காலஞ்சென்ற சுரேந்திரன் மற்றும் இராஜேந்திரன். பராசக்தி. காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் ஞானேந்திரன். ரவீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும். விக்ரம். அரவிந்தன். அபிசாயினி. நீபன். ராகவன். நிவேதனா. கஜன். கிருத்திகா. அகானா. நிருத்திகன். அருண். ஆர்த்தி. துவாரகன். அங்கனி. அட்சயா. சங்கவி. வைஷ்ணவி. டிவானி. சிவஜனன். அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.09.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் இல.16/1. மதவடிலேன். திருநெல்வேலி என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று. காரைநகர் பலகாடு நீலகிரி இந்து மாயனத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றறர். உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
**077 731 5087**
**077 722 5310**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 06 . 1925



மறைவு 04 . 09 . 2022

## S.R. அருமைநாயகம்

(ஓய்வுபெற்ற ஓவசியர் - யாழ். போதனா வைத்தியசாலை.
நீர்பாசனத் திணைக்களம். விவசாயத் திணைக்களம்.
முன்னாள் தலைவர். லங்கா சமசமாயக் கட்சி - யாழ்ப்பாணம்)

நல்லூரை பிறப்பிடமாகவும் அராலி வடக்கு நாகேந்திரா மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட S.R. அருமைநாயகம் கடந்த (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற தம்பிராசா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற பகவதி அவர்களின் பாசமிகு கணவரும். மஞ்சுளாதேவி (முன்னாள் SDT). சதானந்தநாயகம் (ஸ்ரீ - லண்டன்). காலஞ்சென்ற சத்தியானந்தநாயகம் (ரவி) மற்றும் சர்ப்பவானந்தநாயகம் (ரகு- கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும். காலஞ்சென்ற பஞ்சலிங்கம் (மக்கள் வங்கி) மற்றும் சத்தியவதனி (லண்டன்). மலர்விழி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும். ஹர்ச்சுன் (அவுஸ்திரேலியா). வினோசன் (தபாலதிபர் - மானிப்பாய்). கிஷோஜினி (லண்டன்). டெனோசன் (லண்டன்). சர்மி (லண்டன்). ஹரிகரன் (லண்டன்). மதுசா (கனடா). அர்வின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும். லண்டனைச் சேர்ந்த லவன். அவானா. ஸ்ரீயா. ஆத்விகா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு. இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**நாகேந்திரமடம்,**
**அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.**
**021 205 1568**

(cs.46400) (2.6)

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 08 . 1961



மறைவு
06 . 09 . 2022

## திருமதி யோகேஸ்வரன் மோகனநாயகி (லலிதா)

புங்குடுதீவு 09 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை 4 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரன் மோகனநாயகி (லலிதா) நேற்று (06.09.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் - சத்தியவதி தம்பதியரின் பாசமிகு மகளும். காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும். யோகேஸ்வரனின் (ஈசன்) பாசமிகு மனைவியும். சோபிகா. கஜன் (பிரான்ஸ்). தர்சன். துவாரகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும். கார்த்தீபன். பவித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும். நகுலேஸ்வரன் யோகேஸ்வரன். காலஞ்சென்ற ஏகநாயகி ஆகியோரின் சகோதரியும். இராசலச்சுமி. இராசினி. மல்லிகாதேவி. காலஞ்சென்றவர்களான சொர்ணலிங்கம். இராசலிங்கம ஆகியோரின் மைத்துனியும். செல்வராணி. காலஞ்சென்ற மதியபரணம் ஆகியோரின் சகோதரியும். லவுசிகன். மதுசிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளிவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4 ஆம் வட்டாரம்,**
**வேலணை கிழக்கு,**
**வேலணை.**

தகவல் :
**குடும்பத்தினர்**
தர்சன் (077 040 3563)
துவாரகன் (077 268 4987)
கார்த்தீபன் (077 947 6244

(cs20657) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
19 - 07 - 1949



இறப்பு
06 - 09 - 2022

## தனபாலசிங்கம் இராஜேஸ்வரி

அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் இராஜேஸ்வரி நேற்று (06.09.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசம் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை மற்றும் சின்னம்மா (கனடா), இலட்சுமி, சரஸ்வதி, பவளம், பத்மதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் த.ஜீவகன் (ஜீன்-பிரான்ஸ்), த.ஜீவிதன் (ஜீவி - தொழில்நுட்ப உத்தியோகத்தர் - சிறீபுர திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் நதியா (பிரான்ஸ்), சர்மிகா ஆகியோரின் மாமியாரும் இனியா, திலானி (பிரான்ஸ்), தருண், திருண் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2022) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
**077 959 0934**

# கைக்குண்டுடன் ஒருவர் கைது

தருமபுரம் உழவனூர் பகுதியில் கைக்குண்டு ஒன்றுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.
அந்தப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நடைபெறுகின்றது என்று கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸார் சுற்றிவளைப்பு நடத்தியபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
சந்தேகத்துக்கு இடமான முறையில் அங்கு நடமாடிய ஒருவரைச் சோதனையிட்டபோது, அவரிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பான தமிழன் கைக்குண்டு மீட்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.
அந்தப் பகுதியில் இருந்து கைக்குண்டைக் கண்டெடுத்ததாகவும், பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக அதை வைத்திருந்ததாகவும் சந்தேகநபர் விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்றும், சந்தேகநபர் 14 நாள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-113)

**வேலைவாய்ப்பு**

யாழ்.நகரில் அமைந்துள்ள "அம்மா" முதியோர் நோயாளர் காப்பகத்திற்கும் நோயாளர் பராமரிப்பு சேவைக்கும் வேலையாட்கள் தேவை.

0777126859,0777126860

# மரண அறிவித்தல்



## கதிரித்தம்பி சீவரத்தினம் (சொக்கர்)

தண்ணீர்த்தாழ்வு கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஊரங்குணை கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி சீவரத்தினம் (சொக்கர்) கடந்த (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - நாகம்மா தம்பதியரின் புதல்வனும். காலஞ்சென்ற முத்துத்தம்பி - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும். நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும். பிரதீஸ் (கனடா). பிரமிளா (ஆசிரியை - இந்துக்கல்லூரி - கொழும்பு). பிரசாந் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும். கோகுலவர்மன் (பொறியியலாளர் - CECB Colombo) அவர்களின் பாசமிகு மாமனாரும். நவரத்தினம் (கனடா). இலட்சுமி. சரஸ்வதி. சிவமணி. ஜெயரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும். புஸ்பகுமாரி (கனடா). காலஞ்சென்றவர்களான ஜெயரூபநாதன். ஜெயமோகன். சற்குணநாதன் மற்றும் விஜி (பிரான்ஸ்). மதியாபரணம் (கனடா). நல்லம்மா (கனடா). பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2022) புதன் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. நண்பகல் 12.00 .மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**குடும்பத்தினர்.**
**மருகன் - 077 358 0826**
**மகள் - 077 283 6916**

**ஊரங்குணை,**
**கட்டுவன்.**

(cs.46410 (2.6)

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் நிறுவை, அளவை, நிறுக்கும் கருவிகள் முத்திரையிடல் தொடர்பான அறிவித்தல்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினது நிர்வாக ஆளுகைக்குட்பட்ட சகல வர்த்தகர்களினதும் (ப.நோ.கூ.சங்கங்கள் சந்தை வியாபாரிகள் உட்பட) நிறுவை. அளவை கருவிகளினை கீழ்வரும் திகதிகளில் சபையினது உப அலுவலகங்களில் யாழ் மாவட்ட அளவீட்டு அலகுகள். நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு பரிசோதகர்களினால் பரிசோதித்து முத்திரை இடப்படவுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். மேலும் இந் நிறுவை அளவை கருவிகள் கட்டாயமாக பரிசோதித்து முத்திரையிடப்படவேண்டும் என்ற காரணத்தினால் சகல வர்த்தகர்களும் உரிய தினத்தில் சமூகமளித்து பயன் பெற்றுக்கொள்ளுமாறு சேவையுணர்வுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 08.09.2022<br>09.09.2022 | காலை 9.00 மணி | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம் கோப்பாய் |
| 12.09.2022<br>13.09.2022 | முதல்<br>மாலை 3.00 மணி | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம் உரும்பிராய் |
| 14.09.2022 | வரை | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம் புத்தூர் |
| 15.09.2022<br>16.09.2022 | | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம் அச்சுவேலி |

**தியாகராஜா நிரோகஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**
**07.09.2022**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தாயின் மடியில் 02 . 03 . 1950



இறைவன் அடியில் 05 . 09 . 2022

## நாகேசு கந்தசாமி

மானிப்பாய் வடகிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேசு கந்தசாமி நேற்று முன்தினம் (05.09.2022) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் மானிப்பாயை சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு தவப் புதல்வனும், கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பும் பாசமும் கொண்ட மருமகனும், தங்கமலரின் (மனோகரி) அன்புக் கணவரும், தாட்சாயினி (ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி), நிசாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தங்கமலர், தங்கராணி, காலஞ்சென்ற மனோண்மணி, சந்திரராணி, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், தியாகராசா, நாகலிங்கம் மற்றும் இரத்தினம் சந்திராதேவி, காலஞ்சென்ற அருந்ததி, தங்கராசா, அரியமணி, காந்திமலர், மகேந்திரராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.09.2022) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய்

தகவல்:
குடும்பத்தினர்
077 684 5842/ 077 745 7685

(ஏ. 20649) (2.6)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 16 . 12 . 1944



உதிர்வு 07 . 08 . 2022

## அமரர் சிவக்கொழுந்து துரைராசா

(முன்னாள் செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - கம்பர்மலை வித்தியாலயம்- கொம்மந்தறை, ஆலோசகர் - பூபாளராகங்கள்)

**யாழ்ப்பாணம் வடமராட்சி கொம்மந்தறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவக்கொழுந்து துரைராசா அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி.**

இம்மா நிலத்துள்பிறந்தவருள்
ஏத்திப் போற்றத் தகுந்தவர்யார்?
தம்மால் இயன்ற பணிதன்னைச்
சார்ந்த மனிதர்க்களிப்பவர்தாம்!
கொம்மந்தறையில் குடியிருந்த
குணத்திற் பெரியர் துரைராசா
பெம்மான் அடிகள் தமைச்சேர்ந்தார்
பெரிதே அவரும் செய்தபணி!
நமதூர் வித்தி யாலயத்தின்
நன்மைக்காகச் சேர்ந்துழைத்தார்
தமது மனையாள் பிள்ளைகளைத்
தலையாய்க் காக்கும் கடன் தவறார்
கமத்தில் சிறந்தார் கருணையுளக்
காரியங்கள் பலசெய்தார்
உமையாள் பாகன் அடி நிழலில்
உறக்கம் கொள்க அவருயிரும்!

பூபாள ராகங்கள் விழாக்குழு

# உள்ளூராட்சி சபைக்கு கூடுதல் அதிகாரங்கள்

## பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

**கொழும்பு, செப். 6**

**அரசமைப்பை மறுசீரமைப்பு மூலம் கலப்பு தேர்தல் முறைமையை தயாரித்து உள்ளூராட்சி மன்றங்களுக்காக அதிகூடிய அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்க ஆக்கபூர்வமான நடடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கதிர்காமத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசமைப்பு, மறுசீரமைப்பு ஊடாக உயரிய சபையான நாடாளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகூடிய அதிகாரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரம் கலப்பு தேர்தல் முறைமை தயாரிக்கப்படும். வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், நலன்புரி விடயங்களுக்காக புதிய உத்திகள் கையாளப்படும் -என்றார். (எ-இ)

# போராட்டக்காரர்களை உடனே விடுவிக்கவேண்டும்

## யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 7

அமைதி வழிப்போராட்டக்காரர் மீதான ஒடுக்குமுறையை நிறுத்தி, கைது செய்யப்பட்டவர்களைக் காலம் தாழ்த்தாது உடனடியாக அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் என்று யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தால் நேற்று அனுப்பப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

இலங்கையில் அமைதி வழியில் நல்ல மாற்றத்தை எதிர்நோக்கி முன்னெடுக்கப்பட்ட போராட்டக்காரர்களின் முயற்சி மக்களுடைய ஆதரவுடனும் பங்கேற்புடனும் முன்னேற்றமடைந்தமை வரலாறு. இதனால் ஆட்சிபீட மாற்றங்கள் ஏற்பட்டமையும் வரலாறு. ஆனால் தற்போது மனித மாண்புக்கு ஒவ்வாத பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச்சட்டம் என்பவை பிரயோகிக்கப்பட்டு அமைதி வழிப் போராட்டக்காரர் மீது திணித்துள்ள ஒடுக்குமுறையை உடனடியாக நிறுத்தும்படி புதிய ஜனாதிபதியையும் அரசையும் யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் கோருகின்றது.

அத்துடன் அமைதி வழிப் போராட்டக்காரருடன் அரசு உடனடியாகப் பேச்சில் ஈடுபடவேண்டும். கைது செய்யப்பட்டவர்களை, காலம் தாழ்த்தாது உடனடியாக அரசு விடுதலை செய்ய வேண்டும் -என்றுள்ளது. (ஒ-14)

# சாவ. வங்களா வீதியில் போக்குவரத்துச் சிரமம்

## முறைப்பாடளித்தும் நடவடிக்கையில்லை

சாவகச்சேரி - நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட மீசாலைமேற்கு வட்டாரத்திலுள்ள வங்களா வீதியில் போக்குவரத்து மேற்கொள்வது பெரும் சிரமத்தை ஏற்படுத்துகின்றது.

இது தொடர்பில் சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்கு பல்வேறு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அந்தப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மீசாலை மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்ற நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தண்ணீர்த்தாங்கி அமைக்கும் பணிக்காக, கடந்த சில காலப்பகுதிக்கு முன்பாக அதன் ஒப்பந்த நிறுவனமானது கனரக வாகனங்களைக் குறித்த வீதி வழியாகப் பயன்படுத்தியது. அதன்போது வீதியில் பெரிய குழி ஏற்பட்டது. குறித்த வீதியால் பாடசாலை செல்லும் மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் மழைகாலத்தில் தண்ணீர் தேங்கி நிற்கும் வேளைகளிலும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பில் பிரதேச மக்களால் கடந்த இரண்டு வருட காலமாக சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்கு பல்வேறு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டும் உரிய அதிகாரிகளால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தனர். (ம-14,159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 07 . 1978



மறைவு 04 . 09 . 2022

## பத்மநாதன் சிவகீதன் (காந்தன்)

(கந்தன் களஞ்சிய உரிமையாளர்)

மண்கும்பான் 4ம் வாட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் உப்புமடம் சந்தியை வதிவிடமாகவும் கொண்ட திரு.பத்மநாதன் சிவகீதன் 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பத்மநாதன் லில்லிமலர் ஆகியோரின் அன்பு மகனும் கஜந்தினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் விமலாதேவி ஆகியோரின் மருமகனும் வர்மிலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), நேருஜா (கோண்டாவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவநீதன் (பிரான்ஸ்), பத்மலோஜினி, சத்தியலோஜினி (லண்டன்) தவநீதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வனிதா (பிரான்ஸ்), சித்திரகுமாரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்), கெங்காதரன் (லண்டன்) , சரண்யா (பிரான்ஸ்), சுலெக்ஸ்சனா, நிமல்ராஜ், கஜந்தரூபி (லண்டன்), நிசாந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஐஸ்வர்ஜா, அபினேஸ், அட்ஷயா ஆகியோரின் சித்தப்பாவும் சஞ்சயன், சஞ்சனா, மதுஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் இனியா, அய்சா, அவந்திகா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2022) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

**0775720267, 0778543849**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## திரு.கந்தையா சிவசுப்பிரமணியம்

(பத்தர் மணியம்–வட்டக்கச்சி)

வண்ணார்பண்ணை நாச்சிமார்கோவிலடியை பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி இராமநாத புரத்தை வசிப்பிடமாகக் கொண்ட திரு.கந்தையா சிவசுப்பிரமணியம் நேற்று (06.09.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் பிரகலாதன் (ஸ்ரீமுருகன் அரிசி ஆலை .பருத்தித்துறை). அருந்ததி. சிறிகாந்தன் ((ஸ்ரீமுருகன் அரிசி ஆலை. பரந்தன்). மாலினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர். வட்டக்கச்சி). அகிலா (அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறுவர் நன்னடத்தைப் பிரிவு. மாங்குளம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான திருநாதன். செல்லத்துரை. தயாளன். கருணாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிருந்தா. ஜெகதீஸ்வரன். ரஜனி. சிவராசா. சிவநேசன் ஆகியோரின் அருமை மாமனாரும் காலஞ்சென்ற சிவசக்தியபாமா மற்றும் ராஜேஸ்வரி. கமலேஸ்வரி. சுகிர்தராணி. காலஞ்சென்ற பத்மாதேவி. சிவமூர்த்தி மற்றும் சிவகுமார். காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் சிவராசன். கௌரிமனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அனோஜா. நிதர்சிகன். ஹர்சிகன். யதுர்சனா. நிறைஜா. தனுசிகன். புவிராஜ். றேனுசா. ஓபிக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2022) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

**582, 5ஆம் யுனிற் இராமநாதபுரம்**
**077 047 2951, 077 446 6173**

போஷாக்கை...

மேம்படுத்தத் திட்டங்கள் ஒன்றும் இல்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன. நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:- 5 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் மந்த போஷணை நிலைமை தொடர்பான உலக தரப்படுத்தலில் இலங்கை 6ஆவது இடத்திலும், தெற்காசிய தரப்படுத்தலில் 2ஆவது இடத்திலும் இலங்கை உள்ளதாக அண்மையில் யுனிசெப் தெரிவித்திருந்தது.

இது தொடர்பில் அரசாங்கம் உரிய வேலைத்திட்டத்தை முன்வைக்கவேண்டும். சிறுவர்களில் 5 வயதுக்கு குறைந்த வர்களே அதிகளவில் மந்த போஷணை நிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கை சனத்தொகையில் 49 லட்சம் பேர் தமக்கான உணவை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். வற் வரி மேலும் அதிகரிக்கக்கூடும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறினார். அவ்வாறென்றால் இம்மாத நிறைவில் உணவுப் பணவீக்கம் 100 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும். சிறுவர்களே நாளைய எதிர்காலம். எனவே எதிர்காலத்தில் மந்த போஷணைமிக்கதொரு சமூகம் உருவாகும் ஆபத்து நிலையை இல்லாமற் செய்ய வேண்டும் - என்றார். (அ-ம)

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 • 04 • 1939



இறப்பு 31 • 08 • 2022

## திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை

(மேனாள் பிரதி நில அளவையாளர் நாயகம்)
(Rtd. Deputy Surveyor General)

யாழ்ப்பாணம், காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough ஐ தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதபிள்ளை அவர்கள் 31ம் திகதி ஆகஸ்ட் மாதம் புதன்கிழமை அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சோமநாதர் முருகேசம்பிள்ளை (ஆயுர்வேத வைத்தியர்), சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்புப் புத்திரனும், காலஞ்சென்றவர்களான பிரபல பாணந்துறை வர்த்தகர் முருகேசு (SKM), மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், புஷ்பலீலாவின் (லீலா) அவர்களின் ஆருயிர்க் கணவரும், அனுஷா (லண்டன்), Dr.அருட்குமார் (லண்டன்), அகிலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ராஜேந்திரன் (லண்டன்), பவானி (லண்டன்), ஸ்ரீநவசஜேந்திரன் (சஜி) (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷ்ணு (லண்டன்), Dr.துளசி & கீரன் (லண்டன்) , அஞ்சலி (லண்டன்), ஆர்த்தி (லண்டன்), கிருஷ்ணா (கனடா), மாறன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், பாலசுப்ரமணியம் (மேனாள் கணக்காளர், வாழைச்சேனை காகித தொழிற்சாலை) (கனடா), காலஞ்சென்ற Dr.குணரத்தினம், பரம்சோதி (மேனாள் அதிபர், ஆசிரியர் கல்லூரி கோப்பாய்) (இலங்கை), விஜயரட்ணம் (மேனாள் ஆசிரியர், கொ/இந்துக் கல்லூரி) (இலங்கை), Dr.ஜெகசோதி (லண்டன்), Eng.பாலச்சந்திரன் (கனடா), Dr.ஆனந்தகுமாரசாமி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பாக்கியவதி (லீலா ) (கனடா), இந்திராணி (இலங்கை), சோதியம்பாள் (இலங்கை), சர்வேஸ்வரி (பேபி) (இலங்கை), மீனாம்பிகை (மீனா) (லண்டன்), யசோதா (கனடா), கிருஷ்ணகுமாரி (அவுஸ்திரேலியா) மேலும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சிவபாக்கியம், கனகலிங்கம், பரமலிங்கம், அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். கிரியைகள் Thursday, 08 Sep 2022 9.00AM – 10:45AM at Tooting & Mitcham Sports & Leisure Ltd, Imperial Fields, Bishopsford Road, Morden, Surrey, SM46BFஇல் நடைபெற்று தகனக்கிரியைகள் Thursday, 08 Sep 2022 11:15 AM – 11:45 AM at Croydon Crematorium, Mitcham Road, Croydon, CR93AT இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தார்
தொடர்புகளுக்கு:
அருட்குமார் (லண்டன்) : +447555918278
ராஜேந்திரன்(லண்டன்): +447799543609
அகிலா (கனடா): +14167434914
முருகேசம்பிள்ளை பரஞ்சோதி +94 774492249
இந்திராணி குணரட்ணம் +94 772943241

# மரண அறிவித்தல்

பிறப்பு 29 - 08 - 1947



இறப்பு 05 - 09 - 2022

## திரு.மனுவேல்பிள்ளை ஜோன்பப்ரிஸ்ற்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், வட்டகொட)

யாழ்ப்பாணம் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல்லை வதிவிடமாகவும் கொண்ட மனுவேல்பிள்ளை ஜோன்பப்ரிஸ்ற் அவர்கள் 05.09.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேல்பிள்ளை, றெஜினா ஹரியர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் சுவானப்பிள்ளை அவர்களின் மருமகனும் திருமதி ஜோன்பப்ரிஸ்ற் தேவமலர் - (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் டல்பின் றொஷானி .(தீபா) அவர்களின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற குயின்ரஸ், நொயிலின், குயினா (பிரான்ஸ்), வதனா (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் லோறன்ஸ் ஆதவன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும் ஆரண்ன், ஆதித்தன் (லண்டன்) அவர்களின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.09.2022) புதன்கிழமை பிற்பகல் செட்டிகுளத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 11.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

கையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களில் எங்காவது ஒரு தமிழர் பிரதம செயலாளராக இருக்கின்றாரா? வடக்கு மாகாணத்தில் தற்போதுள்ள பிரதம செயலாளரை விட அனுபவமிக்கவர்கள் வட மாகாணத்தில் உள்ள போதிலும் அந்தப் பதவிக்கு ஒரு சிங்களவரே நியமிக்கப்பட்டுள்ளார். 80 வருட இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பதற்காகவே மாகாணசபை கொண்டு வரப்பட்டது. எனினும் வடக்கு மாகாணத்தில் தகுதியுள்ள அரச சேவையாளர்கள் இருக்கின்றபோதும், அங்கு சிங்களவர்கள் நியமிக்கப்படுகின்ற நிலைமையானது, ஆக்கிரமிப்புச் செயற்பாடாகும். தமிழர்களுக்காக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபை திட்டத்தில் இன்று அதிகாரங்கள் யாரிடம் இருக்கின்றன?

**அமைச்சர்கள் இல்லாத நாடாளுமன்ற விவாதம்**

நாட்டில் போஷாக்கின்மை தொடர்பில் இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் பேசப்படுகின்றபோது, அமைச்சர்கள் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பதே ஆசியாவில் ஆச்சரியம். அதேநேரம், போஷாக்கின்மை தொடர்பாக பேசப்படுகின்றபோது, வடக்கு - கிழக்கில் கடந்த 30 ஆண்டு போர்க்காலத்தில் ஏற்பட்டிருந்த போஷாக்கின்மையை நாட்டில் உள்ள சிங்களச் சகோதரர்கள் யோசிக்க வேண்டும்.

போஷாக்கின்மையால் அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கிளிநொச்சி மாவட்டமே முதன்மையான மாவட்டமாகும். சந்திரிகா காலம் முதல் மஹிந்த காலம் வரையில் வடக்கு - கிழக்கில் உணவுத்தடை விதிக்கப்பட்டு மக்கள் கஷ்டப்பட்டு இறந்த நிலைமையை இன்று தென்னிலங்கையில் பார்க்க முடிகிறது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் கடலட்டைக்காக வழங்கப்பட்டுள்ள இடங்களில் சீனாவின் நிறுவனம் ஒன்றின் செயற்பாடு காரணமாக உள்ளூர் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சீன நிறுவனத்தால், அங்குள்ள மக்கள் போஷாக்கின்மை உள்ளவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களுக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பேசும் சீனா, இலங்கையின் அமைதியின்மையில் மறைகரமாக மோசமாக செயற்பட்டு வருகிறது.

**மக்களின் நிலங்கள் இராணுவத்தினரிடம்**

பச்சிலைப்பள்ளியில் இராணுவத்துக்கு ஆயிரத்து 840 ஏக்கர் காணியை கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் 14 ஆயிரம் பேருக்குக் காணியில்லை. கிளிநொச்சியில் 4 ஆயிரம் பேருக்குக் காணியில்லை. எனினும் பலாலியில் படையினர் 3 ஆயிரம் ஏக்கரில் தோட்டம் செய்கின்றனர். வட்டக்கச்சியில் இராணுவம் தோட்டம் செய்கிறது. இராணுவம் தோட்டம் செய்வதன் மூலம் நாட்டின் போஷாக்கின்மையை தீர்க்கமுடியுமா? - என்றார். (அ-ம)

## கடனை...

கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறினார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

'அடுத்த 25 வருடங்களில் கடனற்ற சக்தி வாய்ந்த இலங்கையை உருவாக்குவதற்கு வலுவான கொள்கை கட்டமைப்பின் ஊடாகச் செயற்பட வேண்டும்.

இந்த வேலைத்திட்டம் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மாறாத பலமான கொள்கை கட்டமைப்பாகச் செயற்படுத்தப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவர எதிர்பார்த்துள்ளேன். அத்துடன், உண்மையைக் கண்டறியும் பொறிமுறை ஒன்றை உருவாக்கப் புதிதாக சட்டம் தயாரிக்க உத்தேசித்திருக்கின்றேன். மக்கள் தற்போதைய அரசியல் கலாசாரத்தை வெறுக்கின்றனர். நாட்டின் எதிரணி விமர்சனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, இளைஞர்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். சில தவறுகளால் பெரும் நன்மை இழக்கப்பட்டது.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை நிறைவேற்றவேண்டும். அரசமைப்பில் மேலும் திருத்தம் செய்யப்பட வேண்டும். தேசிய சபையொன்றையும் உருவாக்கவேண்டும். கட்சித் தலைவர்கள் உள்ளடங்கும் வகையில் இந்தச் சபை அமைய வேண்டும்.

இலங்கை என்ற நாடு சிங்களம், தமிழ், முஸ்லிம் என அனைத்து இன மக்களுக்கும் சொந்தமானது. நாம் ஒவ்வொரு நாளும் பிச்சையெடுத்துக் கொண்டும், கடன் வாங்கிக் கொண்டும் இருக்க முடியாது. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று யாராக இருந்தாலும் அவர்கள் நாடு வங்குரோத்து அடைவதை விரும்புவதில்லை. எனவே, கடன் பெறாத பொருளாதாரம் ஒன்றை உருவாக்க ஒன்றுபடுவோம். இளைஞர்கள் மாற்றத்தைக் கோரி முதலாவது போராட்டத்தை ஆரம்பித்தனர். அந்தப் போராட்டம் முடிந்துவிட்ட நிலையில், நாட்டைக் கட்டியெழுப்பும் இரண்டாவது போராட்டத்தை இங்கிருந்து ஆரம்பிப்போம்' - என்றார்.

'ஒன்றாக நாட்டைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப் பொருளில் இவ்வருட மாநாட்டை ஐக்கிய தேசியக் கட்சி நடத்தியது. 28 வருடங்களின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி, அரச தலைமைத்துவத்துடன் தனது ஆண்டு நிறைவு விழாவை நடத்தியது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் நடத்தப்படும், கட்சியின் முதலாவது ஆண்டு விழா இது என்பதும் விசேட அம்சமாகும். நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரையும் ஒன்றிணைக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மற்றும் வகிக்காத அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி, பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட பல அரசியல் கட்சித் தலைவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தேசிய ஒருமைப்பாட்டின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில், தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-22)

## பொருளாதாரக்...

என்ன காரணம்? இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஜே.வி.பியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் மக்களின் நாளாந்த வாழ்க்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திய தரப்பினருக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை.

பொருளாதாரப் பாதிப்பு நாட்டு மக்கள் மீது முழுமையாகச் சுமத்தப்பட்டுள்ளது. எரிபொருள், மின்சாரம், நீர் ஆகியவற்றின் கட்டணமும், அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் நடுத்தர மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு உயர்வடைந்துள்ளன.

பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்திய குற்றவாளிகளான முன்னாள் நிதியமைச்சர் மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சீன உர விவகாரத்தில் அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இரசாயன உரத்தை தடை செய்து விவசாயிகளை நடு வீதிக்கு கொண்டு வந்தவருக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, மாறாக நாடாளுமன்றத்தின் ஊடாக நடுத்தர மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரி அதிகரிப்பு குறித்து மாத்திரம் அவதானம் செலுத்தப்படுகிறது. நாட்டு மக்கள் எவ்வளவு நாள்களுக்கு இந்தத் துயரத்தைப் பொறுத்துக் கொள்வார்கள்? - என்றார். (அ-ம)

## ரஷ்ய...

ரஷ்யாவில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு உள்ள தடைகள் குறித்து நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரஷ்யாவின் தற்போதைய நிதி நிலைமை, தரமதிப்பீட்டைவிட இலங்கையின் கடன் தரம் வீழ்ச்சியடைந்துள்ளமை, எரிபொருள் வழங்குநர்கள் பணம் செலுத்தத் தவறியமை மற்றும் கடன் பத்திரங்களை திறக்க முடியாத நிலை போன்ற காரணங்களால் ரஷ்யாவிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன - என்றார். (அ-ம)

## தெல்லிப்பழை...

பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு ஸ்தம்பபூசையுடன் திருவிழா ஆரம்பமாகி, தொடர்ந்து 7.30 மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்பெற்று, காலை 9 மணிக்கு அம்பாள் தேரில் வலம்வந்து அருள்பாலிப்பார். தேர்த் திருவிழாவை முன்னிட்டு ஆலய வளாகம் அனைத்து விதத்திலும் தயார்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. (அ-ம-14)

## சமஷ்டிக்கு...

இனங்கள் கொண்ட ஒரு தேசத்தை ஒற்றுமையாகச் சீர்செய்து கட்டமைத்து அதை அங்கீகரித்தல் ஆகும். அது ஒரு சிறந்த தீர்வு முயற்சி. அதனை வைத்துப் பெரும் பீதியையே இந்த நாட்டில் உருவாக்கினர். அதேபோல் ஒரு பீதி இன்று சர்வதேச நாணய நிதியத்துக்கும் ஏற்பட்டிருக்கிறது இவ்வாறானவர்களின் உரைகளை மக்கள் நம்புவதும் தவிர்க்கப்பட வேண்டும் - இவ்வாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'மூழ்கின்ற கப்பலில் மாலுமியாகச் செயற்பட முடியாது என்று நழுவிக் கொண்ட தலைவர்கள் மத்தியில் அந்தக் கப்பலை நான் எப்படியாவது கரை சேர்ப்பேன் என்று பொறுப்பெடுத்த ஜனாதிபதி ரணிலின் தைரியத்தைப் பாராட்டுகின்றேன். அத்தோடு இந்த நாடு அவருக்கு என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது எடுக்கப்பட்ட தீர்மானங்களிலே எங்கே தவறிழைத்திருக்கின்றோம் என்பதை நாம் பார்க்க வேண்டும். அது குறித்த மறுபரிசீலனை அவசியம். அரச மற்றும் எதிர்த்தரப்புக்கும் இது அவசியம்.

வற் வரி இப்போது 12 வீதத்தில் இருந்து 15 வீதமாக உயர்த்தப்பட்டதற்கு எதிராக எதிர்த்தரப்பில் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். விலை இன்னும் அதிகரிக்கும் என்று உசுப்பேத்திக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இதே அரசு வற் வரியை 8 வீதமாகக் குறைத்த போதும்கூட இந்த நாடு பெரும் பொருளாதார வீழ்ச்சியைக் காணப்போகின்றது வற் வரி குறைக்கப்பட்டது தவறு என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்தார்கள். மக்கள் நலனுக்காக அன்று வற் வரி குறைக்கப்பட்டபோது பாராட்டாத எதிர்த்தரப்பினர் இப்போது குறைகாண முயல்கின்றனர். அப்படிச் செய்தாலும் தவறு, இப்படிச் செய்தாலும் தவறா?

1965ஆம் ஆண்டு முதல் 2019 வரை 16 தடவைகள் ஐ.எம்.எப். உடன் இணைந்து செயற்பட்டிருக்கிறோம். ஆக, இந்த நாட்டில் இதுவொரு புதிய விடயமல்ல. நாடு பொருளாதார மீட்சி பெற வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்' - என்றார். (அ-ம-22)

## நாணய...

கொள்ளப்படும் மாற்றங்கள் தொடர்பான விடயங்களை அவற்றை நடைமுறைப்படுத்தும்போதே அறிவிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தின் ஒருபகுதியாக, இலங்கையின் நிதியமைச்சர் சர்வதேச நாணயநிதியத்துடன் பொருளாதார கொள்கைகள் குறித்த குறிப்பாணையில் கைச்சாத்திடவுள்ளார். சர்வதேச நாணயநிதியத்துடனான விவரங்களை வெளியிடுவது வெளிப்படைத்தன்மைக்கு அவசியமான விடயம் என்றாலும் அதில் சில மிகவும் முக்கியமான தகவல்களும் உள்ளன.

வரிகள் குறித்த விடயங்களையும் அவற்றை நடைமுறைப்படுத்தும் வரை அறிவிப்பதில்லை. வரிசீர்திருத்தம் குறித்த விடயங்களை நடைமுறைப்படுத்தும்வரை நாடாளுமன்றத்துக்கு தெரிவிக்க முடியாது. வருமான வரி போன்ற விடயங்களை முன்கூட்டியே அறிவிக்க முடியாது. நாங்கள் பொதுமக்களுடனோ அல்லது நாடாளுமன்றத்துடனோ பகிர்ந்துகொள்ளக்கூடிய விடயங்களுக்கு எல்லை உள்ளது. எனினும், பொதுநிதிக்கான அதிகாரம் உள்ளதால் நாடாளுமன்றத்திடம் இந்த விடயங்களை பகிர்ந்துகொள்ளவேண்டியுள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்தும்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். அதன் பின்னரே நடைமுறைப்படுத்துவோம் - என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று நேற்று வலியுறுத்தினார். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வாவும் இதே கருத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் மருத்துவமனையில்

# சிறுவர்களுக்குச் சத்துணவு வழங்க முடியாத நிலைமை



**கொழும்பு, செப். 7**

**கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் மருத்துவ மனையில் சிகிச்சைபெறும் குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என மருத்துவமனையின் துணைப் பணிப்பாளர் மருத்துவர் சந்துஷ் சேனாபதி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாடு ஆகியவற்றால் சிறுவர்கள் மீது மந்தபோசணை தாக்கம் செலுத்தியுள்ளது.
இதனால் சிறுவர்கள் அதிகளவில் நோய்த்தொற்றுகளுக்கு இலக்காகி மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர்.
இந்நிலையில் கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு சத்தான உணவை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
சிறுவர்களுக்கு வழங்கப்படும் உணவில் இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றை போதுமான அளவு சேர்ப்பதிலும் குறைபாடு ஏற்பட்டுள்ளது.
முட்டைக்கு பதிலாக உலர்பழங்களே சிறுவர்களுக்கு வழங்கப்படுகிறன. எனவே நன்கொடையாளர்கள் உதவிபுரிய முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச-இ)

## கொடிகாமத்தில் டெங்கு சோதனை


டெங்கு பரவுவதைத் தடுக்கும் முகமாக கொடிகாமம் நகரப்பகுதிகளில், டெங்கு சோதனை நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.
கொடிகாமம் பொலிஸார், சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து இந்தச் சோதனைகளை மேற்கொண்டனர்.
நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் சந்தைக் குடியிருப்புகள், பொது மலசலகூடங்கள் போன்ற இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.
அதன்போது டெங்கு குடம்பிகள் உருவாகக் கூடிய நீரேந்து பொருள்களும் கழிவுத் தண்ணீர் தேங்கியுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றைக் குறிப்பிட்ட நேரத்தில் துப்புரவு செய்ய வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.
அத்துடன் நகரப்பகுதிகளில் டெங்கு குடம்பிகள் உருவாகக் கூடிய நீரேந்துப் பொருள்களை சேகரித்து, சாவகச்சேரி பிரதேசசபை வாகனத்தில் இன்று ஒப்படைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

(ஓ-14)


### ஓராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 18 – 11 – 1948

ஆண்டவன் அடியில் 07 – 09 – 2021



அமரர் திருமதி சார்மதிதேவி சொர்ணலிங்கம்
(யாழ்.அல்லைப்பிட்டி 02)
திதி: பிரதமை (ஆவணி வளர்பிறை)

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக்கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த
உங்களை நாம் எண்ணாத
நாளில்லையம்மா!

இல.37/26, முதலாம் ஒழுங்கை,
பிறவுண்றோட்,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்,

(CS 46332) (3/6)

### தேவை
சாரதிகள், கூலியாட்கள் தேவை.
இலக்கம் 15வது ஒழுங்கை பிறவுண் வீதி
077 772 2215

### கருங்கல் சல்லி வகைகள் விற்பனைக்கு
மதவாச்சியில் இருந்து கொண்டு வரப்பட்ட கருங்கல் சல்லி வகைகள் விற்பனைக்கு உண்டு. 5 நூல் சல்லி 3/4 இஞ்சி சல்லி டஸ்ற். கலவண் 6 x 9 கல் போன்ற பொருட்கள் டிப்பர் மூலமாக பெற்றுக் கொள்ளலாம். (CS 20614) (3/6)
075 079 9222, 075 579 9222
076 008 5751

### வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
பொதிகள் கடிதங்கள் அனுப்பிட
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு ● UK 1700/- ● SWISS 2700/-
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகை
திருமுருகன் கொம் நெற்
321 K.K.S Road, Jaffna (முட்டாஸ் கடை சந்திக்கு அருகாமை) 077 755 4528

### Student Visa and Work Visa
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- Student Visa: UK, CANADA, FINLAND, SWEDEN, FRANCE AND AUSTRALIA
- Visitor / Tourist Visa: All Countries.
- Work Visa: UK and Canada.(Nurse, Chef, Farm workers etc..)

சகல விதமான online application செய்து தரப்படும்
(Appointments, online application etc……)



Call: 0770385584
Visa Consultant
134 Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
Email: naltcjaffna@gmail.com

### ALLIANCE FRANCAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் புத்தூரில் 141 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.
- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
  விவசாயம் செய்வதற்கும். வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150.000) மட்டும்.
  20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 077 6585 999
076 4365 814
077 8748 135

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
- நான்கு பரப்பாகவும். இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 076 755 8606
077 911 6983


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.